**<u>19.08.2019 அ.வ.எண். 117/2015 வா.த.சா.1 வசந்தி</u>**

**<u>குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கில் 1ம் வாதி எனது கணவர் என்று சொன்னால் சரிதான். பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர தடையுத்தரவு கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கு தாக்கல் செய்ததற்கு முன்தாக பிரதிவாதிக்கு எங்களது வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு அனுப்பினோம். தாவா சொத்தை நாங்கள் அனுபவித்து வருவதை பிரதிவாதி இடையூறு எதுவும் செய்யக்கூடாது என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நாங்கள் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு எதையும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கின் விவரங்களை நான்தான் வழக்கறிஞரிடம் தெரிவித்து வழக்கை தாக்கல் செய்யச்சொன்னேன். தாவா சொத்துக்கள் கூத்தவேடு மற்றும் கொரக்கோட்டை கிராமங்களில் அமைந்துள்ளது. தாவா சொத்துக்கள் சர்வே எண். 82/1ல் 2 ஏக்கர் 7 செண்ட் சம்மந்தமானவை ச.எண். 85/2ல் 50 செண்ட் நிலம் சம்மந்தமாகும். ச.எண். 94 காலிமனை சம்மந்தமாகவும், ச.எண்.99/24 உள்ள வீடு சம்மந்தமாகவும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்கள் எனது மாமனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். பிரதிவாதி எனது கணவரின் தம்பி என்று சொன்னால் சரிதான். எனது மாமனாருக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் சம்மந்தமாக எனது மாமனார் உயிருடன் இருந்த காலத்திலேயே பாகப்பிரிவினை ஏற்பட்டது. தாவா சொத்தை பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். கடந்த 25.09.2003 அன்று தாவா 1 மற்றும் 4 அயிட்ட சொத்துக்கள் சம்மந்தமாக பூத்தவேடு கிராமத்தை சேர்ந்த பிரதிவாதி மற்றும் எனது கணவரின் தாயாரின் தகப்பனாரான சம்பத்ராவ் நைனார் என்பவரின் மனைவியான அவர்களது பாட்டி ஜீவரத்தின அம்மாள் பிரதிவாதியின் பெயருக்கு உயில் எழுதிகொடுத்தார் என்று சொன்னால் அதைபற்றி எனக்கு தெரியாது. மேற்சொன்ன ஜீவரத்தின அம்மாள் எனது கணவரின் பெயரில் உயில் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு 30 செண்ட் நிலம் சம்மந்தமாக எனது கணவரின் பெயரில் உயில் எழுதிவைத்துள்ளார். பாகபிரிவினையில் எனது கணவருக்கு 7 ஏக்கர் 30 செண்ட் பாகமாக ஒதுக்கப்பட்டது. பாகபிரிவினையில் எனது கணவருக்கு 5 ஏக்கர் 23 செண்ட் நிலம் மடட்டுமே பாகமாக கொடுக்பட்டது என்றும் அதில் 4 ஏக்கர் விற்பனை செய்துவிட்டோம் என்றும் தற்சமயம் எங்களுக்கு 1 ஏக்கர் 23 செண்ட் மட்டுமே உள்ளது என்று சொன்னால் சரியல்ல. 4 ஏக்கர் நிலத்தை நாங்கள் விற்பனை செய்துள்ளோம் என்று சொன்னால் சரிதான். எனது கணவரால் விவசாயம் செய்யமுடியும். விவசாயம் செய்துவருகிறார். எனது கணவர் வாய்பேச முடியாமலும், காது கேட்கும் திறன் இல்லாமலும் இருந்துவருகிறார் என்றால் சரிதான். அவ்வாறு எனது கணவர் மாற்றுத்திறனாளியாக இருந்து வருவதால் அவரால் விவசாய வேலை செய்யமுடியாது என்று சொன்னால் சரியல்ல. பாகப்பிரிவினை ஏற்படுவதற்கு முன்னதாக பிரதிவாதி மட்டுமே விவாசம் செய்துவந்தார் என்றும், நானும் எனது கணவரும் விவசாயம் செய்வதற்கு உறுதுணையாக இருந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா 4ம் அயிட்ட சொத்தில் உள்ள வீட்டின் அளவுகளை நாங்கள் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். அந்த வீட்டின் மின் இணைப்பு எண் எனக்கு தெரியாது. அந்த மின்சார இணைப்பு எனது

கணவரின் பாட்டி ஜீவரத்தினம் என்பவரின் பெயரில் இருந்து வருகிறது. அந்த வீட்டை நாங்களும் பிரதிவாதியும் சேர்த்து அனுபவித்து வருகிறோம். அந்த வீட்டை பிரதிவாதி புதுப்பிப்பதற்காக முயற்சித்த சமயத்தில் நானும் எனது கணவரும் பிரச்சனை செய்தோம் என்று சொன்னால் நாங்கள் இவ்வழக்கை தாக்கல் செய்த பிறகு அவ்வாறு புதுப்பிக்க முயற்சித்தார் நானும் எனது கணவரும் அதனால் கேட்டோம். உயில்படி தாவா 4ம் அயிட்ட சொத்து வீடு பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் எனது கணவர் தான் மூத்த நபர் ஆவார். அவருக்குதான் அந்த வீட்டின் மீது உரிமை உண்டு. உயிலை ஏமாற்றி எழுதிகொண்டனர். நான் சொன்னவாறு உயிலை ஏமாற்றி எழுதிக்கொண்டிருந்தால் எனது கணவருக்கும் அவரது பாட்டி உயில் எழுதிவைத்திருக்கமாட்டார் என்றும் நான் இவ்வழக்கிற்காக ஏமாற்றி உயில் எழுதிக்கொண்டதாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வீடு சம்மந்தமாக பிரதிவாதியின் பெயருக்கு உயில் அல்லது வேறு எந்த ஆவணம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. பாகப்பிரிவினை சம்மந்தமான ஆவணங்கள் ஏதும் என்னிடம் இல்லை. எனது மாமனாரின் சொத்துக்கள் சம்மந்தமாக எழுத்து மூலமாக 1983ம் வருடம் பாகபிரிவினை ஏற்பட்டது. அந்த பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகலை நாங்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். பாகபிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகலை எங்களால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியும். தாவா சொத்துக்களை நாங்கள்தான் அனுபவித்து வருகிறோம். அது சம்மந்தமான பட்டா எனது கணவரின் பெயரில் தான் இருந்து வருகிறது. நான் முதலில் தாவா சொத்துக்கள் பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்ததாக குறிப்பிட்டு பின்பு எனது கணவரின் அனுபவத்தில் இருந்து வருவதாக முன்னுக்கு பின் முரணாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எங்களுக்கும், பிரதிவாதிக்குமிடையே சொத்து சம்மந்தமாக ஏற்படும் பிரச்சனை சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளோம். அவ்வாறு அளித்த புகார் நகலை நாங்கள் இவ்வழக்கில் தாக்கல் செய்தோமா என்றால் இல்லை. அவ்வாறு நாங்கள் அளித்த புகாரின் பெயரில் விசாரணை ஏற்பட்டு சமரசம் ஏற்படும். தாவா சொத்து சம்மந்தமாக நாங்கள்தான் பிரச்சனை செய்துவந்தோம் என்றும் அது சம்மந்தமாக பிரதிவாதிகள் காவல் நிலையத்தில் புகார் அளித்து அதன்பேரில் புகாரின் பெயரில் போலிசார் நாங்கள் பிரச்சனை ஏதும் செய்யக்கூடாது என அறிவுறுத்தினர் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து சம்மந்தமாக எங்களுக்குள் அடிக்கடி பிரச்சனை ஏற்பட்டதால் தான் தற்சமயம் பிரதிவாதி சென்னையில் குடியிருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. எங்களுக்கு தெரிந்த வரையில் அவர் வந்தவாசியில் தான் வசித்து வருகிறார். தாவா சொத்தில் உள்ள மின் இணைப்பு சம்மந்தமாக நாங்கள் பிரச்சனை செய்து மின்சார ஒயர்களை அறுத்தோம் என்றும், அது சம்மந்தமாக தெள்ளாறு காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது என்று சொன்னாலும், சொத்து சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்ட சமயத்தில் காவல் நிலையத்தில் மின்சார ஒயர்களை அறுத்ததாக அவர் கூறினார் அவ்வாறு நாங்கள் ஏதும் செய்யவில்லை. தாவா சொத்துக்கள் அனைத்தும் பிரதிவாதிகள் அனுபவத்தில்தான் இருந்துவருகிறது என்றும், தவறாக எனது கணவர் பெயரில் பட்டா வழங்கபட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி எங்களுக்கு எதிராக அ.வ.எண். 96/2017 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். குறிப்பாக என்ன பரிகாரம் கோரி பிரதிவாதி அந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது. கூத்தவேடு

கிராமத்தில் உள்ள ச.எண். 82/1சில் உள்ள 9-1/2 ஏர்ஸ் நிலமும், ச.எண். 91/2ஏல் உள்ள 12-1/2 ஏர்ஸ் நிலமும், ச.எண். 91/4ல் 23 ஏர்ஸ் நிலமும், 99/5டில் உள்ள 8 ஏர்ஸ் நிலமும், 91/6ல் 20 ஏர்ஸ் நிலமும் பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது. பாகப்பிரவினை பத்திரத்தின் அசல் பிரதிவாதியிடம் உள்ளது. பாகப்பிரிவினை பத்திரத்தை பார்த்தால்தான் என்னென்ன சொத்துக்கள் பாகமாக கொடுக்கப்பட்டது என்பதை குறித்து தெரியவரும் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்துக்கள் எங்களுக்க பாகமாக கொடுக்கப்பட்டது. தாவா 4ம் அயிட்ட சொத்தின் பட்டா எனது கணவரின் பாட்டி ஜீவரத்தனம் அம்மாள் பெயரில் இருந்து வருகிறது. தாவா சொத்தில் நெல், வேற்கடலை, உளுந்து ஆகியவற்றை பயிரிட்டுள்ளோம். தண்ணீர் வசதி ஏற்றார்போல் நாங்கள் பயிரிட்டு வருகிறோம். குறிப்பாக எந்த சர்வே எண் உள்ள நிலத்தில் மின்சார இணைப்பு உள்ளது என்று எனக்கு தெரியாது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.**